RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2011

# தமிழச்சியின் வனப்பேச்சி கவிதைத் தொகுப்பில் மனித - இயற்கை உறவு

ந. அஜித் குமார் [அ, *]

[அ] இக்கால இலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா.

# Human-Nature Relationship in Vanapechi Collection of Poems of Thamizhachi

**N. Ajith kumar [a, *]**

[a] Department of Modern Literature, School of Tamil Studies, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India

* Corresponding Author: ajithpandian.in@gmail.com

Received: 20-06-2022
Revised: 05-10-2022
Accepted: 27-10-2022
Published: 05-11-2022

Check for updates

**ABSTRACT**

Although it is said that time has passed since poetry flourished in Tamil literature, it can be seen from the poets who continue to travel along the path of poetry that even today there is a special place for poetry. In the collection of poems written by the poet Thamizhachi Thangapandian called Vanapechi, one finds how nature is made the theme of her poems and gives them life. To show the widening distance between human beings and nature, she has composed poems on the natural environment she encountered in her childhood. In each poem, she uses natural objects for illustration. In her poems, natural objects become the subject of talk, even when mental longings and cravings are uttered and expressed from layers of memory. Human beings who had made it their nature to love nature began to attack nature in course of time as minds to free themselves from nature. As a result, natural calamities occurred. Even today, human beings are in love with nature and struggle to save them. This article states that Thamizhachi refers to the emotions and messages expressed in the poems and connects them with living natural objects.

**Keywords:** Wildflower, Nature, Kitai, Neem, Chameleon, Cactus

## முன்னுரை

சமூகமாக வாழ்தல் என்பது மனிதர்கள் இணைந்து வாழ்தல் மட்டுமல்ல. இயற்கை சார்ந்த அனைத்தோடும் இணைந்து வாழ்தல் ஆகும். வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகள் முதல் இரைதேடி வீட்டிற்கு வரும் பறவைகள் ஈறாக அனைத்தோடும் மனிதர்கள் தம் உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இயற்கையின் ஒவ்வொரு அசைவிலும் மனிதர்களுடைய செயல்பாடுகள் கலந்திருக்கின்றன. இயற்கைக்கு முரணாக மனிதர்கள் செயல்படும் போது இயற்கையின் சீற்றங்கள் மனிதர்க்குப் பாடம் கற்றுத் தரும் வகையில் சூழல்கள் அமைகின்றன. கால்நடைகள், தாவரங்கள், பறவைகள் இவற்றோடு மனிதர்கள் தம்மைப் பிணைத்துக் கொள்ளும் வாழ்வினை மேற்கொள்ள வேண்டும். சங்க காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர். பறவைகள், விலங்குகளோடு கொண்ட தொடர்பினைப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. குருகு, கிளி போன்றவற்றைத் தலைவனிடம் தூது செல்லுமாறு தலைவி கூறும் பாடல்களும் காணப்படுகின்றன. அது போல தன் சிறு வயது நினைவுகளில் தான் கண்ட, விளையாடி, உறவாடிய மரங்கள், பறவைகள், விலங்குகள் ஆகியனவற்றுடனான உறவுகளைக் கவிதையில் நினைந்து உருவாக்கியிருக்கிறார் தமிழச்சி

தங்கபாண்டியன். இயற்கையின் மீது மனிதர்கள் கொள்ளும் வாஞ்சைதான் அதனைப் பாதுகாக்கும் என்பதை இவருடைய கவிதைகள் உணர்த்துகின்றன. எனவே இயற்கை சார்ந்தனவற்றின் மீதான கரிசனை அல்லது பற்றுதல் என இவருடைய வனப்பேச்சி நூலின் கவிதைகளைக் கொள்ளலாம். கால்நடைகளையும், பறவைகளையும் தம் உறவினர்களைப் போல பேசும் வகையில் கவிதைகள் அமைந்துள்ளன.

இக்கட்டுரை வனப்பேச்சி கவிதைத் தொகுப்பானது மனிதர்க்கும் இயற்கைக்கும் உள்ள உறவினைப் பற்றி எடுத்துரைக்கிறது. மனிதர் என்பது கவிஞரையே இங்கு குறித்து நிற்கிறது. அவர் இயற்கைப் பொருட்கள் மீது கொள்ளும் உறவினையே எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

## இயற்கையும் மனிதரும்

தொடக்க காலத்தில் மனிதர்கள் இயற்கையின் பொருட்களை நேரடியாக நுகரும் வகையில் இருந்தனர். அதாவது உணவு சேகரித்தல் நிலையினை இவ்வாறு கூறலாம். வேட்டைச் சமூகத்தில் மனிதர்கள் விலங்குகளை வேட்டையாடினர். அவற்றை பச்சையாகவும் சுட்டும், வேக வைத்தும் உண்ணும் வழக்கம் படிப்படியாக ஏற்பட்டது. பின்னர் விலங்குகளைப் பழக்கித் தம் தேவைக்கு அவற்றைப் பயன்படுத்திக் கொண்டனர். இந்நிலை மேய்ச்சல் சமூகம் எனப்படுகிறது. மேய்ச்சல் சமூக நிலையிலேயே உடைமை கொள்ளும் வழக்கம் வந்து விட்டது. ஒவ்வொரு விலங்கினோடும் மனிதர்கள் உறவினர்களைப் போல பழகுதல் என்பது தோன்றி விட்டது. குறிப்பாக ஆடுகள், மாடுகள், நாய்கள் ஆகியன குடும்பத்து உறுப்பினர்களைப் போல வளர்க்கப்பட்டன. அவற்றோடு கொண்ட உறவு நிலை என்பது வள்ளலாரின் நேசத்தைப் போன்றது. ஊனுயிர்களை நேசித்தல்தான். அவற்றிற்கு ஊறு நேராத வண்ணம் பாதுகாத்தல், அவற்றொடு உறவாடுதல் என்பது அவற்றைக் காத்தல் என்பனவாகும். தாவரங்களுடன் பேசுதல், விலங்குகளோடு பேசுதல், மண், மரம் ஆகியனவற்றோடு பேசுதல் என்பன அவற்றிற்கும் உயிர் இருக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டது என்கிறார் ஆ. சிவசுப்பிரமணியன். “ஒவ்வொரு மனிதனின் உடலிலும் ஆன்மா அல்லது ஆவி உறைகிறது. ஒரு மனிதன் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் போது ஆவி அல்லது ஆன்மா அவன் உடலை விட்டு வெளியேறிப் பிற ஆவிகளைப் பார்ப்பதற்காகப் பறந்து செல்கிறது. அது திரும்பி வந்தவுடன் மனிதன் விழிக்கிறான். மேலும் அவன் கனவில் தோன்றும் விலங்குகள், பறவைகள் போன்ற அஃறிணைப் பொருள்களும் பாறைகள், நீர்நிலைகள் போன்ற சடப்பொருட்களும் கூட ஆவி அல்லது ஆன்மாவைக் கொண்டிருக்கின்றன என்று புராதன மனிதன் கருதினான்” என்று கூறுகிறார் (Sivasubramanian, 2013). தம் கனவில் வரும் பொருட்கள் யாவும் ஆன்மாவைக் கொண்டவை என்பதால்தான் அவற்றோடு தம்மை உறவாக்கிக் கொள்ளும் மனநிலை மனிதர்களுக்கு ஏற்படுகிறது. விலங்குகளை மனிதர்கள் தம் உறவாக நினைப்பதில் மனித இனமே விலங்கு நிலையிலிருந்து உருப்பெற்று வந்தது என்ற மனதின் அடியாழத்தில் இருக்கும் எண்ணமாகும் என உளவியல் ரீதியாகக் கூறப்படுகிறது. “உடல் அமைப்புகளைக் கொண்ட விலங்கினைப் போன்றே மனிதனும் புலன் உணர்வில் தூண்டப்பட்டுச் செயல்படுகின்றான். இச்செய்கை அவன் விலங்கு இனத்தினின்று வந்தவன் என்பதினாலும் இத்தூண்டுதல்கள் மரபு வாயிலாக விலங்குகளிடமிருந்து அவனுக்கு வந்தவை என்ற காரணத்தினாலும் ஏற்படுகின்றது என நாம் கூறலாம்” என்று கூறுவதன் வழி மனிதர்களுக்கும் விலங்களுக்குமான உறவு என்பது அடிப்படையான ஒன்று என அறியலாம் (Ramesh, 2019). விலங்குகளைப்பழக்கிய மனிதர்கள் அவற்றோடு பேசவும், பழகவும் செய்வதற்கு மனிதச் செயல்பாடுகளோடு அவற்றின் செயல்பாடுகள் சிலவற்றின் ஒத்துப் போகும் தன்மை இருப்பதால்தான் எனலாம். சிறு குழந்தைகள் கல் தடுக்கி விட்டால் கல்லை அடித்து குழந்தையை திருப்திபடுத்துவதும் கல்லிற்கு உயிர் இருப்பதாகக் கருதுவதன் ஒரு வடிவமே எனலாம். விளையாட்டுப் பருவத்தில் குழந்தைகள் இயற்கைப் பொருட்கள் அனைத்தோடும் இணக்கமான உறவினைப் பேணுகின்றனர். எனவே அவற்றைப் பிரிதல் அவர்களுக்கு இயலாதவொன்றாக மாறி விடுகிறது.

## இயற்கை எதிர் மனிதன்

மனிதர்கள் இயற்கை எதிர்த்து தம் செயல்களை அமைத்துக் கொண்ட போது அவனுக்கு எதிராக இயற்கை செயல்படத் தொடங்கியது. புவி வெப்பமயமாதல், காடுகள் அழிதல், விலங்குகள், பறவைகள் அழிக்கப்படுதல் என இயற்கையின் சமநிலை குலையும் போது பேராபத்துக்கள் விளைகின்றன. மரங்களை அழித்தலுக்கு எதிரான இயக்கங்கள் இன்று பெரிதாக நடப்பதற்கு இயற்கை பற்றிய விழிப்புணர்வே எனலாம். குலக்குறிகளை மனிதர்கள் வழிபடுவதும் அவற்றைப் பேணுவதற்கும் காப்பதற்கும் செய்த ஒரு வழிமுறை எனஇன்றை ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மரங்களை வழிபடும் மரபு தமிழகத்தில் காணப்படுகிறது. மரங்கள் அழியாமல் காப்பதற்காகவே இவ்வாறு அவற்றைப் புனிதப்படுத்தினர் எனக் கொள்ளலாம். எங்கும் நிறைந்திருந்த வனங்களைக் கிராமத்து மக்களே பராமரித்து வந்தனர். வளங்களைப் பாதுகாத்து அவற்றிலிருந்து விறகு, தேன், பழம், மூலிகை போன்ற தமக்குத் தேவையான பொருள்களை வனங்களைப் பாதிக்காத வகையில் எடுத்துக் கொண்டு அவற்றோடு ஒரு அழகான உறவை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். இங்கிருந்து சேகரித்த மரத்தைக் கொண்டு தங்களுடைய வீடுகளைக் கட்டிக் கொண்டும் விவசாயச் செய்து கொண்டும் வாழ்ந்து வந்தனர். வனங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றைப் புனிதத் தன்மை கொண்டவையாகப் பாவித்து வந்தனர். சில வனப்பகுதிகளை கோயில் காடுகளாகவும் பாதுகாத்து வணங்கி வந்த கலாச்சாரம் அது" என்று கிராமத்து மக்கள் காடுகளோடும் நிலத்தோடும் நிலங்களில் வளருகின்ற பல்வகைத் தாவரங்களோடும் கொண்டுள்ள உறவானது அவர்களது வாழ்வியலையும் உள்ளடக்கியதாக அவற்றையும் பாதுகாப்பதாக இருந்தமையை எடுத்துக்காட்டுகிறது (Sangeetha Sriram, 2014). மேலும் மரத்தில் தெய்வம் உறைவதாகக் கருதி அவற்றை வழிபாடு செய்தனர். இது போல இயற்கைப் பொருட்கள் ஒவ்வொன்றின் மீதும் முன்னோர்களின் ஆவி உறைவதாகவும், தெய்வம் உறைவதாகவும் கருதி அவற்றை வணங்கி வந்தனர். காலப் போக்கில் இந்த நிலைமை தலைகீழாக மாறத் தொடங்கியது. இயற்கையைத் தன் வயப்படுத்தி அவற்றை தன் சுயநலத்திற்காகச் சுரண்டும் மனப்போக்கு உருவானது. மலைகள், காடுகள் அழிக்கப்பட்டு தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டன. வழித்தடங்கள் ஏற்படுத்தப்பட்டன. வாகன வசதிகளுக்காக மரங்கள் அழிக்கப்பட்டன. மரங்களில் வசித்த பறவைகள் இருப்பிடம் அற்று ஒழிந்தன. இவ்வாறான சூழல் மனிதர்க்கு ஏற்படுத்தும் கேடுகளையே இன்றைய சூழலியலாளர்கள் கூறி வருகின்றனர்.

## இயற்கைப் பாடிய இலக்கியங்கள்

சங்க காலம் முதல் தற்காலக் கவிஞர்களின் பாடுபொருளுக்குக் களம் தருவன இயற்கைப் பொருட்கள் ஆகும். இயற்கையின் செயல்பாடுகளைத் தாம் வாழும் சூழலோடு இணைத்துப் பேசாத கவிஞர்கள் இல்லை எனக் கூறலாம். சங்க காலத்தில், மரம், செடி, கொடி, விலங்குகள், பறவைகள், கல், பாறை, மண், மின்னல், மேகம், சூரியன், நிலவு, விண்மீன், கோள்கள் எனப் பலவற்றையும் குறித்த அறிதலை உடையவர்களாக விளங்கினர். எனவே அவற்றின் செயல்பாடுகளையும் நகர்வுகளையும் உற்றறிந்து தம் பாடல்களில் வெளிப்படுத்தினர் எனக் காணமுடிகிறது. "வானம் ஊர்ந்த வயங்குஒளி மண்டிலம் என்று பாடுகின்றார். நீல நிற வானத்தின் பின்னணியில் வெண்ணிற ஒழுங்கு பெற்று நாரைக் கூட்டம் பறப்பதை நம்மில் பலரும் கண்டதுண்டு. ஆனால் அது நம் கண்ணில் தோன்றியதாகப் பெருமை கொள்ள இயலாது. நாரைகளின் ஒழுங்குபெற்ற கூட்டம் வளைந்து வரிசையாய்ப் பறப்பதை நோக்கிய ஔவையார்க்கு மலர்மாலை ஒன்று நினைவில் எழுந்தது" என்னும் கூற்றானது பண்டைத் தமிழ்ப் புலவர்கள் இயற்கையின் நிகழ்வுகளைத் தம் கருத்தினை ஏற்றிக் கூறும் பாங்கினை உணர்த்துகிறது (Varadharasan, 2014). இயற்கையோடு இணக்கமான உறவினைப் பேணி வந்தனர் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது. ஐந்திணை நிலப் பாகுபாட்டிற்கும் உரிய முதல், கரு, உரிப்பொருள்கள் பாடுபொருளாகின. அதன் தொடர்ச்சியை அற இலக்கியங்களிலும், பக்தி இலக்கியங்களிலும் காப்பியங்களிலும் விரிவாகக் காணலாம். காப்பியங்களில் நில வருணனை என்ற ஒரு பகுதியே காப்பியக் கூறாக அமைந்திருப்பதைக் கொண்டு நிலத்திற்கும் அதன் சூழமைவுக்கும்

முக்கியத்துவம் கொடுத்தனர் எனக் கொள்ளலாம். அது போல் பாரதியார், காக்கை குருவி எங்கள் சாதி என்றார், பாரதிதாசன்,

"வானச்

சோலையில் பூத்தத் தனிப் பூவோ

நீதான் சொக்க வெள்ளிப் பாற்குடமோ அமுத ஊற்றோ

காலை வந்த செம்பரிதி கடலின் மூழ்கிக்

கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப் பிளம்போ"

என்று இயற்கையைப் பாடுவதைக் காணலாம் (Bharathidasan, 1958). புதுக்கவிதைகளில் பலரும் இயற்கையைத் தம் இணையாகக் கருதி கவிதை வடித்துள்ளனர். இயற்கை நேசமே இவ்வாறு இயற்கைப் பொருட்களைத் தம் கவிதைக்கு பயன்படுத்த காரணம் எனலாம். தமிழச்சி தங்கபாண்டியன் எழுதிய கவிதை நூலான வனப்பேச்சி வனத்தின் பல்பரிமாண கூட்டிணைவை எடுத்துரைக்கும் விதமாக அமைந்துள்ளது. அவர் விலங்கு, பறவை, மரம் ஆகியனவற்றோடும் சூரியன், நிலவு, ஆறு, குளம், கிணறு ஆகியனவற்றோடும் கொண்ட உறவினைக் கவிதையாக வடித்துள்ளார்.

## இயற்கைப் பொருட்களும் தமிழச்சியின் கவிதைகளும்

மனித சமூகம் வளர்ச்சிக் கட்டங்களில் அடுத்தடுத்து நகர்ந்து கொண்டே இருக்கிறது என்பதை உணர்ந்துள்ளனர். இவ்வளர்ச்சியானது இயல்பான வாழ்விலிருந்து மனிதர்களை அப்புறப்படுத்தும் வகையில் இருப்பதை ஏக்கமுடன் கவிதைகளில் வெளிப்படுத்துகிறார்.

மனிதர்கள் மேய்ச்சல் சமூகக் கட்டத்தில் விலங்குகளைப் பழக்கி அவற்றைத் தம் தேவைக்குப் பயன்படுத்திக் கொண்டனர். விலங்குகளில் ஆடுகளும், மாடுகளும் உணவிற்காகவும் வேறு தேவைகளுக்காகவும் பயன்பட்டன. வீட்டில் வளர்க்கப்படும் இவற்றினைப் ராமரித்து வளர்க்கும் செயல்பாடுகளை வீட்டில் உள்ள பலரும் செய்கின்றனர். தமிழச்சியின் வனப்பேச்சி கவிதைகளில் கிடை என்னும் கவிதையானது ஆட்டுக் கிடையைப் பற்றியும் ஆடுகளைப் பற்றியும் கூறுவதாக அமைகிறது. ஆடுகளுடனான தம் உறவினை வெளிப்படுத்துவதாக கவிதை சுட்டுகிறது. மேல் படிப்பிற்காகச் சென்று வந்த போது மாறியிருக்கும் சூழமைவில்தன் பால்ய காலத்தில் கிடையில் உள்ள ஆடுகளோடு தான் கொண்ட நேசத்தையும் பற்றையும் வெளிக்காட்டுகிறது கவிதை,

"பேனா மை படிந்த உன் கையில்

கரம்பை மணம் தேடி

நுகரும் ஆடுகளின் பசி தீரக்

கம்மந் தட்டைகளை நீ ஆய்ந்து தரும்

சலசலப்பை மென்படி

கடக்கிறது காற்று"

என்னும் கவிதையில் கல்விக்காகச் சென்று வந்த பெண்ணின் கைகளில் முந்தைய காலத்து கரம்பை மணத்தை தேடும் ஆடுகள் என்ற குறிப்பானது ஆடுகளை மேய்த்து அவற்றோடு பழகிய தன்மை சுட்டப்படுகிறது (Thamizhachi Thangapandian, 2017). அவற்றை இப்போதெல்லாம் மேய்ச்சலுக்கு கொண்டு செல்லாமல் கம்மந்தட்டைகளைக் கொண்டு வந்து போட்டு பசியாற்றும் விதம் இதில் கூறப்படுகிறது. காட்டுப் பகுதியில் இருக்கும் சூழலமைவினைப் பற்றிக் கூறிவிட்டு ஆட்டுக் கிடையில் இப்போதும் அசைபோடும் ஆடுகளைப் பற்றிக் கூறுகிறார் கவிஞர்.

"அந்தியில் நடக்கின்றன மயில்கள்

வாலிபத்தின் கனவொன்றைத் துய்த்த ரகசியமுடன்

பிரிந்தோம் நாம்

அசைபோடுகின்றன கிடை ஆடுகள்

அங்கே இப்போதும்”

என்று ஆடுகளைப் பற்றியும் அவற்றைப் பிரிந்து செல்லும் நிலை ஏற்பட்டதைப் பற்றியும் உணர்த்துகிறார் (Thamizhachi Thangapandian, 2017). ஆடுகள் மட்டுமின்றி தான் வாழ்ந்த சூழலில் உள்ள பல்வேறு உயிர்களுடன் கொண்ட தொடர்பினைக் கவிதைகளில் ஏக்கமாக வெளிப்படுத்துகிறார். ஊரில் கோடையில் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் சூழலை விவரிக்கும் போது,

“தகிக்கும் வெட்கையின்

உக்கிரம் உண்டு

செரிக்க முடியாமல்

பொறுமிக் கிடக்கிறது ஊர்

மழைத் தண்ணீரில்

வாய்க் கொப்பளித்த

வசந்த காலம், செம்பு சொல்லும்

செவிவழிச் செய்தி மட்டுமே

உலைத் தண்ணீருக்கே

உள்ளகை அளவு ஊருணிதான் தற்சமயம்

மரவட்டையாய் சுருண்டு

வெடித்துக் கிடக்கும்

கண்மாய்ப் பாளத்தில்

பொதிந்து கிடக்கும் மயிலிறகாய்

கேவிக் கிடந்த உன் நினைவு

கூடும் கருமேகமாய்த் திரளுகையில்

காற்று வந்து கலைத்துப் போகிறது

கரிசலின் மழை கண்ணீர் தானென்று”

என்னும் கவிதையில் உள்மன ஆவலை, பிரிவின் துயரை வெளிப்படுத்தும் போது ஊரில் ஒரு காலத்தில் வசந்த காலம் இருந்ததெனவும் அது மாறி பாலையாய் போய் வெகு காலம் ஆயிற்றெனவும் மழைத் தண்ணீரை பிடித்து வாய் கழுவிய காலம் மலையேறிப் போய் விட்டதெனவும் அந்த நினைவுகள் செவி வழிச் செய்தியாய் மாறிப் போனதெனவும் கூறுகிறார் (Thamizhachi Thangapandian, 2017). வசந்த காலம் பாலையாகிப் போனதற்கு பருவ மாற்றமும், சூழல் கேடும் காரணமாக அமைந்திருக்கலாம். அதனையே இவ்வாறு வெளிப்படுத்துகிறார். இயற்கைச் சூழல் மாறுபாட்டினையே இக்கவிதையில் கூறுகிறார் எனலாம். தன்னை விட்டுப் பிரிந்தவரின் நினைவு கூடும் மேகமாய் திரளுவது என்பது பாலை போன்று வறண்டிருக்குத் தன் மனதிற்கு இதம் சேர்க்கும் வகையில் தலைவனின் நினைவுகள் வருவதாகவும் வற்றிப் போன கரிசலில் கண்ணீராய் உகுப்பதாகவும் கூறுகிறார். தன் மனதின் கேவலைக் கூறுவதற்கு இயற்கையின் தன்மையை உருவகமாய் கூறி அதனோடு உள்ள தன் இணக்கத்தை வெளிப்படுத்துகிறார் கவிஞர். இது போன்ற கடுமையான கோடையை வேப்பம்பூ கோடை என்று வருணிக்கிறார். வேப்பம்பூ கோடையில் பூக்கும் தன்மையது. வசந்ததைத் கொணரும் வகையில் அதன் வடிவம் அமைந்திருக்கும். கோடை காலத்தில் இலைகள்

உதிர்ந்து புதிய இலைகள் துளிர்க்கத் தொடங்கும் போது இலைகள் பூக்கத் துவங்கும். அதன் காட்சியைக் காண்பதற்கு இனிமை தரக் கூடியதாக இருந்தாலும் தகிக்கும் வெம்மையைத் தாங்கவியலாது என்பதையும் மனவுணர்வுகளுக்கு உருவகமாய் கூறுகிறார்.

மாற்று என்னும் சிறு கவிதையில் மாறிவரும் சமூகச் சூழலில் மனிதர்கள் உண்மை முகத்தை மறைத்துத் தம்மை பிறரிடம் வெளிப்படுத்த வேண்டிய தேவையிருப்பதைச் சுட்டுகிறார்.

"அசைவற்றிருக்கும் பச்சோந்தியின்

தயார் நிலையிலிருக்கிறது மனம்

அடுத்த கணத்திற்கான ஒரு

உலர்ந்த உரையாடலுக்கும்

செயற்கை வியப்பிற்குமான

புருவத் தூக்கலுக்கும்

கசப்பு மறைத்த குறுஞ்சிரிப்பின்

பாரம் குறைக்க

வேண்டியதாயிருக்கிறது

வியர்வையுடன் கூடியதொரு அணைப்பும்

முகஞ்சுழிக்கின்றதொரு சுடுசொல்லும்"

இக்கவிதையானது மனிதர்களுக்கு இடையிலான இடைவெளியைக் கூறுவதற்காக எழுதப்பட்டுள்ளது (Thamizhachi Thangapandian, 2017). மனிதர் தமக்குள் உள்ள உறவில் விரிசல் இருக்கிறது. ஒவ்வொருவரும் சமயத்திற்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொள்கின்றவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொருவரின் புன் சிரிப்பிற்கு பின்னால் கசப்பான உண்மை மறைந்திருக்கிறது, ஒருவரை வியப்பதற்கும் அவருடைய புகழைத் தாம் உணர்வதற்கும் செயற்கையாகவே புருவத்தைத் தூக்கி தன் உணர்வினைனக் காட்ட வேண்டியிருக்கிறது. தவிர்க்க இயலாத அணைப்பினாது தேவையற்றதாக இருக்கிறது. இதற்குப் பின்னும் சுடுசொல்லால் முகஞ்சுழிக்க வைக்கின்ற சூழல் ஏற்பட்டு விடுகிறது எனக் கூறுகிறார், மனிதர்கள் ஒவ்வொருவரும் இவ்வாறு தம்மை சூழலுக்கு ஏற்ப மாற்றிக் கொள்பவர்களாக இருந்தாலும் சூழலில் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் பச்சோந்தியை உவமைக்கான எடுத்தாள்கிறார். மனிதரின் செயல்பாடுகளுக்கு இயற்கையின் ஓர் உயிரியான பச்சோந்தி கருப்பொருளாகிறது. கவிஞரின் இக்கவிதையானது மாற்று என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. மனிதர் இத்தகைய பச்சோந்தி மனப்பான்மையை மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் எழுதியிருக்கிறார் எனக் கொள்ளலாம். இயற்கைப் பொருட்களைத் தம் கவிதைக்குப் பயன்படுத்தும் விதம் இக்கவிதையிலும் வெளிப்படுகிறது, பதியம் என்னும் கவிதையில் நினைவுச் சுவடுகளைப் பற்றிக் கூறும் போது ஒவ்வொரு செய்திக்கும் ஒவ்வொரு செடி அல்லது மரத்தை உவமிக்கிறார்.

"சப்பாத்திக் கள்ளிகளில்

சிக்குண்ட சரிகைப் பாவாடையின்

ஓரமென நைந்திருக்கிறது மனம்.

சிக்கெடுத்து நீவி நெடுமூச்சுடன்

உச்சி முகர

புகையிலை நெடிக்கும்

மூதாட்டியின் முத்தமின்றி வறண்டிக்கின்றன

முன்நெற்றியும் முடிக்கற்றைகளும்

காய்ந்த இலந்தைக் கொட்டைகளென
இக்கரிசலின் வெக்கை
என் கனவுகளைத் தீய்க்குமுன்
வந்தென்னைப் பெயர்த்து
காட்டாமணக்கும் நொச்சியும்
மணக்கும் நீர் கசியும் வரப்பில்
சறுக்கிப் போன நம் பால்யத்தின்
தடங்கள் நடுவே பதித்துவிட்டுப் போ"

என்னும் கவிதையில் பால்யத்தில் பதிந்து விட்ட நினைவுகளை எடுத்துரைக்கும் போது சுற்றுச் சூழலில் தான் கண்டுணர்ந்த சப்பாத்திக் கள்ளியும், காய்ந்த இலந்தைக் கொட்டைகளும் காட்டாமணக்கும் நொச்சியுமே நினைவுக்கு வருகின்றமை கூறப்படுகிறது (Thamizhachi Thangapandian, 2017). பால்யத்தில் தான் சந்தித்த சூழல் பெரிதும் மாறிப்போயிருப்பதை மனம் ஒவ்வாத நிலையில்தான் தன் சிறு வயது நினைவுகளினூடாக அவற்றை மேல் கொண்டு வந்து ஆசுவாசம் அடையும் மனநிலை காணப்படுகிறது.

## முடிவுரை

இயற்கைக்கும் மனிதருக்கும் ஆன உறவு என்பது இயல்பானது. ஆனால் இன்றையச் சூழலில் இயற்கையைப் பற்றிய அறிதல் அற்ற தலைமுறையினராக உருவாகி வரும் நிலை காணப்படுகிறது. தான் வாழும் சூழலை, இயற்கைப் பொருட்களை நேசித்தல் என்பதும் அவற்றோடு கொண்ட நட்பினை வெளிக்காட்டுவனவாக அமைதல் வேண்டும். கிராமங்கள் நகரங்களாகி வரும் நிலையில் சிறிது சிறிதாக மரபான தன்மை மாறி செயற்கைத் தன்மை மேலோங்குகிறது. சங்க காலத்திலும் அதற்குப் பிந்தைய காலத்திலும் மக்கள் இயற்கையினை ஆராதித்தனர் என்பதை அறிய முடிகிறது, அது போலவே தற்காலத்திய கவிஞர்களில் சிலர் இயற்கையின் மேல் கொண்ட ஆசுவாசமான நட்பினால் அவற்றைத் தம் கவிதைகளில் வெளிப்படுத்துகின்றனர். தான் சிறுவயதில் சந்தித்த இயற்கை சூழல் இப்போது இல்லாமையைக் கண்டு ஏக்கத்துடன் அவற்றை நினைவு கூறுகின்றனர். அத்தகைய நினைவு கூர்தல்களாக தமிழச்சியின் கவிதைகள் அமைகின்றன. ஆடுகள், தாவரங்கள், பச்சோந்தி என பலவற்றைத் தன் பால்ய காலத்தில் பார்த்தவற்றை உணர்வெழுச்சியுடன் நினைவு கூர்கிறார். இயற்கையை நேசிக்கும் தன்மையே இதில் வெளிப்படுகிறது, மனிதருக்கும் இயற்கைக்குமான உறவினை வெளிப்படுத்துவதாக இவருடைய கவிதைகள் அமைகின்றன.

## References

Bharathidasan, (1958) Puratchik Kavi, Sentamzhil Kalvi Nilayam, Trichy, India.

Ramesh, S.R. (2019) Samooga Ulaviyal, Tamilnadu Textbook and Educational Services Corporation, Chennai, India.

Sangeetha Sriram, (2014) Pasumai Puratchiyin Kathai, Kalachuvadu Publication, Nagercoil, India.

Sivasubramanian, A. (2013) Manthiramum Sadangugalum, Kalachuvadu Publication, Nagercoil, India.

Thamizhachi Thangapandian, (2017) Vanapetchi, Uyirmai Pathippagam, Chennai, India.

Varadharasan, Mu. (2014), PazhanTamizh Ilakkiyathil Iyarkai, Paari Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License